DEPOSITION OF WITNESS
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, PANRUTI.

# CC.No.409/2024

Deposition of Witness : LW8/PW4

| | | | |
|---|---|---|---|
| Name | சத்தியராஜ் | Taluk | |
| Father's Name | கோவிந்தசாமி | Village | |
| Age | 36 | calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of day of **24.03.2026.** | | | |

(Accused 1, 2, 3 and 5 present, A4 absent. U/s.317 PFA)

சாட்சியை முத்தாண்டிக்குப்பம் காவல் நிலைய காவலர் திருமதி. ராஜலட்சுமி HC 1949அவர்கள் அடையாளம் காட்டினார்.

**முதல் விசாரணை :**

நான் தற்போது பேர்பெரியான்குப்பத்தில் வசித்து வருகிறேன். தற்போது கூலி வேலை செய்து வருகிறேன். பட்டியல் சாட்சி பிரசாந்த் என்பவரை தெரியும். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் என் கையொப்பம் இல்லை. அதில் உள்ள சாட்சி கையொப்பங்கள் யாருடையது என்று எனக்கு தெரியாது. இவ்வழக்கு சம்மந்தமாகவும், பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் ஆவணம் சம்மந்தமாகவும் எந்த விவரமும் எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க சாட்சி பிறழ் சாட்சியாக அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி அளிக்கப்படுகிறது**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை :**

1. வழக்கின் எதிரிகள் எனக்கு பழக்கமானவர்கள் என்றால் சரிதான். போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றும் நான் போலிசார் விசாரணையின்போது 01.05.2024 அன்று சுமார் 14.00 மணியளவில் முத்தாண்டிக்குப்பம் காவல் நிலைய உதவி ஆய்வாளர் என் முன்பும், பிரசாந்த் முன்பும் இவ்வழக்கு சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரிவரைபடம் வரைந்து பார்வை மகசர் தயார் செய்தார்கள் என்றும், மேற்படி பார்வை மகசரில் நாங்கள் இருவரும் சாட்சி கையொப்பங்கள் செய்தோம் என்றும் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. அவ்வாறு சொல்லிவிட்டு வழக்கின் எதிரிகள் பழக்கமானவர்கள் என்பதால், அவர்களை வழக்கிலிருந்து காப்பாற்றுவதற்காக அரசு தரப்பிலிருந்து விலகி பிறழ் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை– இல்லை.**